பயன்படக்கூடிய சாத்தியங்களும், எடுத்துக்காட்டுகளும்:

- ஓர் எழுத்துருவின் வடிவமைப்பு (கவிதை, கதை) அல்லது பாரம்பரியமொழியில் ஒரு நூல் கணினியில் (நேர்த்தியான அமைப்பு, சிலவேளை விளக்கப்படங்கள், இணையம் இன்றி செய்யமுடியுமெனின்).
- பிறப்பு மொழியில் மிக இன்றியமையாத தேடற் பொறிகளையும் மற்றும் தகவல் வளங்களையும் (விக்கிபீடியா முதலியன) மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல் சில எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்.
- பிறப்பு மொழியில் வலையமைப்புகளிலிருந்து தகவல்களைக் கையகப்படுத்தல் (எ.கா. ஒரு வரலாற்றுக் கருப்பொருள் பற்றி பயிர்ச்செய்கை பற்றி, கவிதைகள் பற்றி, தேவதைக் கதைகள், முதலியன). தலைப்புகள் பற்றிய திட்டமிடல் மாணவர்களிடையே நடைபெறுவதாகும், இணையத்தள ஆய்வு முடிவுகள் கற்பித்தல் கருவிகளுடன் இணைக்கப்படவேண்டும்.
- பிறப்பு நாட்டிலிருந்து தகவல்கள் பெறுதற்கு மின்னஞ்சல், ஸ்கைப், குறுந்தகவல் ஆகியனவற்றைப் பயன்படுத்தல் (உறவினர்கள், நண்பர்கள்).
- பிறப்பு நாட்டு வகுப்பு ஒன்றுடன் தொடர்பு கொள்ளல் கீழே பார்க்கவும் கூ3.6.
- மொழிபெயர்ப்புப் பொறிகளுடன் ஆய்வுசெய்தல் (எ.கா. கூகுள் "மொழிபெயர்ப்பு") பிறப்பு மொழியிலிருந்து அல்லது பிறப்பு மொழிக்கு மொழிபெயர்ப்பதற்காக ஒரு சிறு எழுத்துருவை உள்ளிடுக. என்ன நடக்கிறது? எப் பிழைகளுக்கு எவை காரணமெனக் கூறலாம்?, முதலியன.

---

# 3.5 எங்கள் மொழியிலும் பிற மொழிகளிலும் பேச்சுமொழிகள்

**இலக்கு**

*பெரும்பாலான மொழிகள், முதன்மையாக வாய்வழிப் பயன்பாட்டுக்கு, ஏற்கனவே உள்ள எழுத்து வடிவத்துக்கு மேலாகப் பெருந் தொகையான பேச்சுமொழிகளைக் கொண்டுள்ளன. இது தொடர்பான மாணவர்களின் அறிவுநோக்கினைக் கூர்மைப்படுத்துவதுடன் அவர்களின் மொழியியல் அறிவும் விழிப்புணர்வும் மேம்படுத்தப்படவேண்டும்.*

வகுப்பு 5 - 9 | 45 மணித்துளிகள்



**கருவிகள்:** முடியுமெனின், ஒரு வரைபடம்

**நடைமுறை:**

- அறிமுகம்: எடுத்துக்காட்டாக, இவ்வாறாக ஆசிரியர் பாடத்தைத் தொடங்கி ஒரு பரந்த பேச்சுமொழி வழக்கிலே இன்றைய மொழிக்குரிய மணித்தியாலம் ஒரு சிறப்பான தலைப்புப் பற்றி நோக்கவுள்ளது என மாணவர்களுக்குக் கூறுகிறார். அது என்னவாக இருக்கலாம்?
- கலந்துரையாடல்: மாணவரிடையே உள்ள எடுகோள்கள், அவர்களது முதல் மொழியின் பேச்சுமொழி(கள்) பற்றிய பட்டறிவுகள். யார் பேச்சுமொழியை எங்கே, எப்போது பயன்படுத்துகின்றனர்? பேச்சுமொழியின் எந்த மாதிரியான சொற்கள் உங்களுக்குத் தெரியும்? (பலகையில் ஒரு தொகுதி சொற்களைத் தொகுத்தல்), எத்தகைய பேச்சுமொழி வேறுபாடுகள் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையில் காணப்படுகின்றன? (வரைபடத்தில் காட்டுக!) பலவகைப் பேச்சுமொழிகளுக்கிடையே விளங்கிக்கொள்ளல் தொடர்பான சிக்கல்கள் பற்றி ஆராயவேண்டும்.
- அடுத்த கிழமைக்கான ஒப்படை: பேச்சுமொழிகளைப் பதிவு செய்யவும் (எ.கா. பேரன்மார், முதலியோரை முடியுமாயின் தொலைபேசி அல்லது ஸ்கைப் ஊடாக). சிலவேளை ஒலிப்பதிவு மாதிரிகளை இணையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (இத்தாலியனுக்கு எடுத்துக்காட்டு: http://www.yougulp.it/diletto/) அதனை வகுப்பறைக்கு எடுத்து வந்து ஒரு படத்தில் அதன் பகுதியை உள்ளூர்மயப்படுத்தவும்.
- எழுத்து மொழியின் பார்வையில்: அது எவ்வாறு பேச்சுமொழியிலிருந்து வேறுபடுகின்றது, எங்கே அது பயன்படுகின்றது (எழுத்து நோக்கங்களுக்காக, ஊடகம், செய்திகள், முதலியன) முடியுமாயின் எழுத்துமொழியிலும் பேச்சுமொழியிலும் ஒருசிறு எழுத்துருவை எழுதி ஒப்பிடுக. எழுத்துமொழி தொடர்பாக என்ன இடர் உண்டு?
- எங்கள் மொழியின் சிறப்புமிகு பேச்சுமொழி எது? பேச்சுமொழிகள் எங்கே கேட்கப்படுகின்றன?, யார் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் / பயன்படுத்தவில்லை?

- குடிபுகு நாட்டில் பேச்சுமொழிகளும் எழுத்து மொழியும்: அவைபற்றி மாணவர்களுக்கு என்ன தெரியும், எந்த மாற்று எப்பொழுது பயன்படுகிறது, இங்கே சிறப்புமிகு பேச்சுமொழி எது?
- கலந்துரையாடல்: முதலாவது மொழியிலும் இரண்டாவது மொழியிலும் உள்ள பேச்சுமொழி மற்றும் எழுத்து வழக்குகள் ஆகியவற்றினுடனான என் உணர்வுமிகு தொடர்பு பேச்சுமொழியின் மற்றும் எழுத்து மொழியின் நடைமுறைப் பயன்பாடு பற்றிய என் ஊகம்.

# 3.6 பல்பண்பாட்டு வினாக்களுக்கான தொடர்பு

**இலக்கு**

*பண்பாடுகளில், அவற்றுடன் மற்றும் அவற்றுக்கிடையிலான வாழ்வு பற்றிய வினாக்கள் குறிப்பாக பா.மொ.க மாணவர்களுக்கு நிகழ்காலத்துக்குரியனவாயுள்ளன. 'தொடர்பு' எனும் கருத்திட்டத்தின் நோக்கு என்பது மாணவர்கள் இவ்வினாக்கள் தொடர்பாக வேறு சூழல்களில் உள்ளவர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து தம்முடைய எல்லைகளை விரிவடையச் செய்கின்றனர். அதேவேளை, கருத்திட்டம் மாணவர்களின் எழுத்து மற்றும் ஊடக ஆற்றலுக்குப் பங்களிக்கின்றது.*

வகுப்பு 5 - 9 | 45 மணித்துளிகள்

**நடைமுறை:**

- தலைப்புப் பகுதியிலிருந்து தற்காலச் சிக்கலுக்கு (பல்பண்பாட்டு இணைந்த வாழ்வு) ஆசிரியர் மாணவர்களுக்கு மற்றொரு சூழலில் இருந்து வருபவர்களின் கருத்துக்களைப் பெற்று கலந்துரையாட வேண்டும் என மதியுரை கூறுவர். இது இலத்திரனியல் தொடர்பாடல் வடிவாக (மின்னஞ்சல், முடிந்தளவு குறுஞ்செய்திகள்) அமையவேண்டும். தகுதியான தலைப்புக்களும் கேள்விகளும் பின்வருவனவற்றை உள்ளடக்கும்: இந்த நாட்டில் உள்ள வெளிநாட்டவருடன் வெறுப்புக் கொள்ளும் தனியாள் ஒருவரின் பட்டறிவுகள் – அரசியல் அமைப்பில் வெளிநாட்டவரின் நிலைப்பாடு – கல்வி அமைப்பில் பா.மொ.க வின் நிலைப்பாடு – சிறுபான்மை இனங்களின் நிலைப்பாடும் மதிப்பும், எடுத்துக்காட்டாக, றோம் மக்கள் தற்கால அரசியல் விவாதத்திலிருந்து ஒரு வினா மீதான கலந்துரையாடல்.



- வகுப்பு ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து அதனுடன் தொடர்புடைய பங்காளிகளையும் சூழல்களையும் பற்றிக் கலந்துரையாடும். வகுப்பறைத் தொடர்புகளுக்கு எடுத்துக்காட்டுகள்: பிறந்த நாட்டிலிருந்து ஒரு பள்ளி வகுப்பு – குடிபுகுந்த நாட்டுப் பிறிதொரு சமூகத்திலிருந்து ஒரு பா.மொ.க வகுப்பு – இன்னொரு மொழிக் குழுவினரின் பா.மொ.க வகுப்பு. (சிலவேளைகளில் பிறந்த நாட்டு கல்வி அமைச்சு வேண்டப்படும் தொடர்புகளை வழிப்படுத்தித் துணைசெய்ய முடியும்.
- தனியாள் தொடர்புகளுக்கு: உறவுக்காரர், நண்பர்கள், ஒரே மொழி அல்லது வேறு மொழித் தொடர்பாளர்கள். ஒரே சிக்கலைப் பல்வேறு சூழல்களிலிருந்து வருபவர்கள் கலந்துரையாடுவது களிப்பாகவிருக்கும். அரசியல்வாதிகளுடன் அல்லது பொருத்தமான நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு கருத்துக் கேட்டல் செய்யக்கூடியதாகும்.